1972 மார்ச் 7]

விசாகப்பட்டணத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்றி, சென்னைத் துறைமுகத்தில் கடற்படையை நிறுவ தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கடற்படை பற்றிய வினாவிற்கு விடையளிக்க முடியாததற்கு வருந்துகிறேன்.

வீட்டு வசதிக்கு ஒதுக்கப்பட்ட நிதி

*347 வினா—திரு. ஏ. சுப்ரமணியம் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வீட்டு வசதி பெருக்கத்திற்காக மாநிலங்களுக்கு ஒதுக்கப் பட்ட தொகைகளில் பெரும் பகுதி மாநிலங்கள் பயன்படுத்தாத தால் 'லேப்ஸ்' ஆகிவிட்டது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் நான்காவது திட்ட காலத்தில் எந்த ஒரு தொகையும் தமிழ் நாடு அரசு "லாப்ஸ்" ஆகவிடவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசு மாநில திட்டங்கள் அனைத்திற்கும் சேர்த்து மொத்த கடனுகவும், மொத்த மானியமாகவும் தான் வழங்குவதேயன்றி வீட்டு வசதிக்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்வதில்லை.

மோதூரிலுள்ள காட்டு நிலங்கள்

* 384—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேட்டுப் பாளையம் தொகுதி, மோதூரில் காட்டு இலாகாவுக்குச் சொந்தமான உபயோகமற்ற நிலங்களை விவசாயத் திற்காக நிலமற்ற விவசாயிகட்கு வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.